மஹாயோக பீடத்தில் பீமா என்ற நதியின்
கரையில் புண்டரீகன் என்ற பக்தனுக்கு
வரம் கொடுப்பதற்காக மஹரிஷிகளுடன்
கூட வந்து வசிப்பவரும் ஆனந்தத்திற்கு
காரணமானவரும் பரப்ரஹ்ம ரூபியுமான
பாண்டுரங்கனை பஜிக்கிறேன்.

மின்னல் போன்ற வஸ்திரம் தரித்தவரும்
நீருண்டமேகம் போன்றவரும் சித்ப்ரகாச
ரூபியுமான பரப்ரஹ்ம ரூபியுமான பாண்
டுரங்கனை பஜிக்கிறேன்.

என்னை அண்டின பக்தர்களுக்கு சம்ஸார
ஸமுத்திரம் இவ்வளவுதான் என்பதை காட்டுவதற்காக
இடுப்பில் இரண்டு கைகளை வைத்தவரும்,
ப்ரம்மதேவன் வசிப்பதற்க்காக நாபியில் பத்மத்தை தரித்தவர்,
பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன்.

கண்டதேசத்தில் ப்ரகாசிக்கின்ற
கௌஸ்துபத்தினால் அலங்கரிக்கபட்டவரும்,
தோல்வளை தரித்தவரும், மஹாலட்சுமிக்கு
இருப்பிடவருமானவரும் கண்டா கர்ணனுக்கு
சிவலிங்க ரூபமாய் தரிசனம் அளித்தவரும்,

சாந்தமும், ஸ்தோத்திரம் பண்ணத் தகுந்தவரும்,
சிறந்தவரும், லோகங்களை காப்பவரும்,
பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன்.

சரத்கால சந்த்ரபிம்பத்தை போன்ற முகத்தையுடயவரும்
அழகிய புன்சிரிப்புள்ளவரும், ப்ரகாசிக்கின்ற
குண்டலத்தினால்
ஆகர்ஷிக்கபட்ட கண்டப்ரதேசத்தையுடைவரும்,
செம்பரத்திபூப்போல சிவந்த உதட்டையுடயவரும்,
தாமரை போன்ற கண்களை உடையவரும்,
பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன்.

கிரீடத்தினால் ப்ரகாசிக்கின்ற சகல திக்குகளையுடயவரும்,
விலை மதிக்கதகாத திவ்ய ரத்னங்களினால்
தேவர்களால் அர்சிக்கபட்டவரும்,
மூன்று மடிப்பு சதையுடன் கூடினவரும்,
மயில் தோகையினால் அலங்கரிக்கபட்டவரும்,
பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன்.

பிரபுவும், வேணு நாதம் செய்கின்றவரும்,
முடிவில்லாதவரும், தானாக வேடிக்கையான
கோபவேஷம் தரித்தவரும்,
பசுக்களின் கூட்டதிற்க்கு ஆனந்தத்தை

அளிப்பவரும் அழகிய சிரிப்புள்ளவரும்,
பரப்ரஹ்ம ரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன்.

பிறப்பற்றவரும், ருக்மிணீ ப்ராண நாதரும்,
பரம்ஜோதி ஸ்வரூபம், மோட்சரூபியும் முக்யனும்,
சூரியனும், நமஸ்கரித்தவர்களுடைய
மனக்கவலையை நீக்குகிறவரும்,
தேவர்களுக்கு தேவனும், பரப்ரஹ்ம ரூபியுமான
பாண்டுரங்கனை பஜிக்கிறேன்.

புண்யத்தை கொடுக்கும் பாண்டுரங்க
ஸ்தோத்திரத்தை எவர்கள் ஏகமனதுடன்,
பக்தியுடனும் படிக்கின்றார்களோ அவர்களும்
மரண காலத்தில் ஸம்ஸார சமுத்திரத்தை
கடந்து அழிவதற்க்கான ஹரியின் வீடாகிய ஸ்ரீ
வைகுண்டத்தை அடைகின்றனர்.